1026

உ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸ்ரீவில்லிபுத்தூருக்கடுத்த
திருவண்ணாமலையிலெழுந்தருளிய
கோவிந்தன் மீது

# பதிகமும், அந்தாதியும்.

இஃது
ஸ்ரீவில்லிபுத்தூர், தலைவன்கோட்டை ஜமீன்,
சமஸ்தான ஜோதிட வித்வான்
மகா-௱-௱-ஸ்ரீ
குருமூர்த்தி ஜோஸ்யரவர்கள்
குமாரர்
மகா-௱-௱-ஸ்ரீ
வெங்கடாஜல ஜோஸ்யரவர்களால்
இயற்றியது.

ஸ்ரீவில்லிபுத்தூர், கல்விச்சீமான் மகா-௱-௱-ஸ்ரீ
ச. அப்பாத்துரைக் கவிராயரவர்களால்
பார்வையிடப்பட்டு

ராஜபாளையம், மகா-௱-௱-ஸ்ரீ
T. A. K. அழகர் ராஜா அவர்கள்
பொருளுதவியின்பேரில்

ஸ்ரீவில்லிபுத்தூர்
T. A. S. ராகவா பிரிண்டிங் ஒர்க்ஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

[விலை] 1932 [அணா 2

11 JUN 1932

022:417
N32
149796.

## சாற்றுக் கவிகள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் பரமபாகவதர் மகா-ள-ள-ஸ்ரீ ஜெயராயரவர்கள் குமாரன் ஜே. ராமாராயரவர்கள் இயற்றியது.

முவ்வகைப் பாசம்நீக்கி முதியரா யுலகமாத
லெவ்வியல் பாகநேரு மென்றவென் னேக்கமேக
செவ்விய தாகச்சேட சைலனந்தாதி செப்பிப்
பவ்வமிவ்வுலகபந்தப் பிணியறப் பணித்தான் பாரில். (1)

பாவமேமலிந்து பரகதிமறந்து பலருமிவ்
　　விருடரும்பாரி
லாவதோர் கருமஞ் செய்திடாரென்று
　　மலைந்தலைக்கழிவு பட்டுழன்று
போவதுகருதார் ஆகியேபெரிதும் புன்மையே
　　புறமகம் புரியு
மியாவருமினிதீடேற வேங்கடன்று
　　னியற்றினன் புலவரின்புறவே. (2)

---

மலையம்பதி மகா-ள-ள-ஸ்ரீ பிச்சையாபிள்ளை அவர்கள் இயற்றியது.

மங்களனற் றிருவண்ணுமலை மீதோங்கி
　வயங்கிடு கோபாலகிருஷ்ண வரதற்கன்பாற்
பொங்குதமிழந்தாதி மாலைமிகக புகழ்பதிக
　மதிகரசம் பொருந்தச் செய்து
துங்கதிரிகரணசுத்தி யுடனணிந்து தூயவன்
　ஞேனருளுடன் மெய்ப்புகழும் பெற்று
னெங்கள் வெங்கடாசல ஜோதிடக்கவிஞன்
　எழில்மலசை வேதகுலத திறைவனம்மா.

---

ஸ்ரீவில்லிபுத்தூர் போலீஸ் 153-ம் நம்பர் இலஞ்சி பூர்வவாசகஸ் தருமான மகா-ள-ள-ஸ்ரீ S. சிவஞானம் பிள்ளையவர்களியற்றியது.

பங்கயத்தினிதமுலவுஞ் செல்விதனை மார்பதனிற்
　　பண்பாய் வைத்துக்
கொங்கலர்ந்த சோலைகள்சூழ் திருவண்ணுமலையி லுறைக்
　　கே விந்தன்மேல்

மங்களமாமந்தாதிப் பதிகஞ்சொல் குருமூர்த்தி
மறைமேயான் மைந்தன்
வெங்கடாசலமெனப்பேர் விளங்கியசெந்தமிழ்நூலின்
மேலோன்மாதோ.

---

ஸ்ரீவில்லிபுத்தூர் மகா-ா-ா-ஸ்ரீ ஆறுமுகஞ் செட்டியாரவர்கள்
குமாரர் ஸ்கூல்மாஸ்டர் மகா—ா—ா—ஸ்ரீ
A. வேலாயுதஞ் செட்டியாரவர்கள் இயற்றியது.

வெண்பா.

பெய்வளையா ராடெழினீர்ப் பேராற்றுல் சென்னல்வளர்
செய்வளையார் வில்லித்திரு நகரான் கைவளையார்
வேங்கடவனந்தாதி விளம்பு வெங்கடாசலவே
டாங்கடலுண் டான்றமிழிற்றுன்.

2556
894.811

---

தாருகாபுரம் முருகானந்த கலாசாலைத் தலைமையாசிரியர்
மகா-ா-ா-ஸ்ரீ டீ. சிவகுருநாதத்தேவரவர்கள் இயற்றியது.

திருவண்ணமலை யொருகவிகை பெடுத்தாயருளெனச்
சேவித்தாகஞ்சேர்
திருவண்ணமலை யுறையுந்திருமாலின்புகழ் பதிகஞ்
செப்பினுன்பங்
திருவண்ணமலை முலைத்தாவளவது வின்னருள்
பெருகித்திகழ்சீரானச
திருவண்ணமலையுலகம் புகழ்வெங்கடாசலப்பேர்
செல்வன் மாதோ.

---

ஸ்ரீவில்லிபுத்தூர் கல்விச் செல்வன் மாசி ஆப்காரி சூப்பிரண்
டெண்டு ஸ்ரீமான் அருணகிரி நாடார் பௌத்திரரும், ஸ்ரீமான்
சற்குணநாடார் புத்திரருமான மகா-ா-ா-ஸ்ரீ யமகச்சரபம்
அப்பாத்துரைக் கவிராயர் அவர்கள் இயற்றியது.

மாவளிக்குமாங்கனியை மாதவர்கண்மகிழ
மலர்வழங்கும் வாகார்

மாவளிக்குமாதரவாய் மாமதுரை
மயிலாடு மழவுமஞ்சு
மாவளிக்குமாருத மரமடர்ந்துவளமலிகா
வனங்கண் மன்ன
மாவளிக்கு மாபதியின்மாமன வாழ்
திருவண்ணமலை யாமன்னே. (1)

இற்பதிகம் மனுசனென விலங்கிகிதி துலங்கவித
மிரதிவெட்கப்
பொற்பதிகம் பொருந்துமடப் பூவையர்வாழப்
பதியின் பொருப்புற்றோன்மேல்
நற்பதிகம் பகர்ந்தினிய வந்தாதிப்பனுவலிதை
நைடதஞ்செய்
மற்பதிகம் மசைத்திட வெங்கடாசல
வேதியர்கோமான் வகுத்ததாமால் (2)

வெண்பா.

அந்தாதிப்பாவை யமரம்பிகை யண்ணற் கமையும்
அந்தாதிப் பாவை யமரர் தவர்—சிந்தாதி
ஆசுகவி வெண்பா வறைவோர் மற்றெல்லோர்க்கு
மாசுகவி லாசமதினால். (3)

# முன்னுரை.

---

நீர்வளம் நிலவளம் செழித்தோங்கும், பாண்டிநாட்டின் சிறப்புற்ற, திருப்பதிகளில்மேலான ஆண்டாள் அவதரித்ததும், திருக்கல்யாண நடந்த இடமும், பக்தகோடிகளாற் புகழப்பெற்றதும், அவ்வம்மையே திருப்பாவை இயற்றிய ஸ்தலமுமான வில்லிநகர் என்றும், புதுவைத்தலமென்றும் பேர்விளங்கிய ஸ்ரீவில்லிபுத்தூரெனும் திவ்யக்ஷேத்திரத்துக்கு வடபால் திருக்கோனேரியெனும் புண்ய தீர்த்தத்தோடு, மாவடை, மரவடை சூழ்ந்த, திருவண்ணாமலை யென்னும் திகழ்ந்திலங்கும் சேஷாச்சலமாகிய ஸ்தலத்தில்நின்ற திருமேனியாய் ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசுரனாகத் தோன்றிய ஸ்ரீநிவாசன் பேரில் பக்தன் வேங்கடாசலமெனும் வேதியனால், பதிகம் பத்தும், வேங்கடேசனந்தாதி என்னும் கலித்துறைப்பா முப்பதும் இயற்றியது வியக்கத்தக்கது. அதில் யாப்பலங்காரம் இசை, சொன்னயம், பொருணயம், முதலிய யாவும் குற்றமற்று அமையப் பெற்றிருப்பதால், சரஸ்வதியந்தாதியொப்ப முப்பதாக அமைந்ததாலும், ஆண்டாளருளிய ஐயைந்தும் ஐந்துமறியாத மானிடரை, வையம் சுமப்பதுவம் யென்னுமருள் மொழிக்குப் பொருத்தமாய் இசைந்த தலத்தில் அந்தாதி முப்பதாக ஏற்பட்டதாலும் இது சாலவும் போற்றத்தக்கதே. இதனை பாராயணம் செயினும், துதிக்கினும் இம்மை மறுமைகளில் சகல பாக்கியமும் அடைந்து வாழுவர் என்பது திண்ணம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,

ஜே. கோதண்டராமன்.

---

உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீவில்லிபுத்தூருக்கடுத்த திருவண்ணாமலை

ஸ்ரீவெங்கடாசலபதிபேரில்

# தோத்திரப் பதிகமும்,

# ஸ்ரீ வேங்கடேசன் அந்தாதியும்.

---

நேரிசை வெண்பா.

மாதரிக்கு மாதுளப மாலையணி மாலின்மிசை
பாதரிக்கு மோர்பதிகம் பாடவே—காதரிக்குங்
கொம்பிக்கை முக்கனியை கோவது சிற்றணைவை
தம்பிகளை யார்க்கிவான் றெழுது.

---

நூல்.

பங்கயப்பாதனே பக்தர்களின்நாதனே பஞ்சவர்களின் தூதனே
பாருறெம்பினெடு பாரியவெரும்பிவரை
பகுப்பாக வொவ்வொன்றுளும்
சங்கையறவே நினைந்தனுதினம் போஷிக்குஞ் சங்கமணிகின்ற
சாதிமதபேதமற மாதவசிரேஷ்டராஞ் [கரனே
சாதுக்கடன்னகத்தில்
தங்கிமகிழ்கின்ற திருமங்கை மணவாளனே தந்திமுகனைப்பயந்த
சங்கரீதமயனே சாருமென்மனதினுந்
தானுகந்தே வசிப்பாய்
திங்களொடுசெங்கதிர் தினவலம்செய்திட சேணுலகுளோர்
துதிப்பச் செய்பாளுமேடுதிகழ் கையாளுமேவிவளர்
திரு[...]ணாமலைத்தெய்வமே

டியானையோதிமம் பின்வாங்கும்நடையதும்
பிங்கலம்வெட்குநிறமும் பிழையகலுமெழிலதுங்களை
நிகர்மொழியதும் பெற்றிமிகவானகுணமும்
கொடியானவிடையுடைக் கோதைபுகழ்நாயகா
குன்றைக்குடைப்பிடித்த கொற்றவா நற்றவா
கோபியர்களுற்றவா குணமுள்ளகோபாலனே
யானதுன்பங்கள் தீர்த்தருளுவாயிந்த
கினியையுண்டுமிழ்ந்தோய் வேதமதில் மீதுவளர்
தாந்தநாயகா வெண்ணெய்தனை யுண்டவாயா
செடிகொடிகள் மேவுபொழில் வீடாகநற்றவஞ்
செய்வோ ரமர்ந்திருக்கும் செய்யாழுமேடுதிகழ்
கையாளுமேவிவளர் திருவணுமலைத்தெய்வமே (2)

ந்தமிகுதுளபமும் கௌஸ்துவமணியுடன்
களபமுமணிந்தகண்ணா காளினியில்யானுமுன்
கழலிணைத்தொழுதிடுங் கருத்தானமைந்தனலவோ
சொந்தமுளதாய்தந்தை துதிசெயுங்குருமுதற்
சுற்றமும்யாவுநீயே சுகவாழ்வுதைரியங்கல்வி
யெல்லாமருள் சோதியானந்தகுருவே
பந்தமுறுசகலமும் நித்தியம்மென்றுணர்
பற்றிலாஞானியொப்ப பாரினில்யாவரும்
புகழுமெய்ஞ்ஞானம்பலிக்க நல்வாக்குரைப்பாய்
செந்தழற்குண்மகஞ் செய்திடும வேதியர்
திருமறையோதுகின்ற செய்யாளுமேடுதிகழ்
கையாளுமேவிவளர் திருவணுமலைத்தெய்வமே (3)

மாதங்கநீர்ச்சுனையின் மேவிக்கராகௌவி
வன்திறலுடனிழுப்ப வந்தாதிமூலமே
யெந்தனைக்காவென மகிழ்வுடன் வந்துகாத்தாய்
வாதமுடன்முப்பிணிகள் சேர்சடலமிப்பிறவி
வாராது காத்தருளுவாய் வைனதேயனே
மிழ்வரமுடன்காத்தவா மாதவாவாசுதே

மாதங்கச்சுட்டியும் மஸ்தகடகங்களும்
மலர்மாலையும்புனைந்து வான்மாதர்யாவரும்
வந்துநட னஞ்செய மகிழ்வுறும்பச்சைமாலே
சேதனப்பொருளின்மனம் நேராமலெற்கருள்
செய்தாள்வதுன்கடன்காண் செய்யாளுமேடுதிகழ்
கையாளுமேவிவளர் திருவணுமலைத்தெய்வமே (4)

பங்கமில்லாவில்லிமான்கரில் வாழ்கின்ற
பாவையாங்கோதைதன்னை பரிவுடன்றிருமணம்
புரிந்துடனிருந்திடும் பண்ணவனுனதேவே
துங்கனும்விதுரனின் வளவினிற்சென்றவன்
றூயநல்லமுதுதுய்த்தோய் துஷ்டராம்கௌரவர்
துலைந்திடவைவர்க்குந்துணைவ னீயாயிருந்தாய்
சங்கரன்மைத்துனு நானுன்னையேத்தினேன
சற்சனர்கள் யாவருக்கும் ததியதில்வைகுந்த
பதவியையவசியம் தான்கொடுத்தாதரிப்பாய்
செங்கரத்திலகுவெண் சங்கினொடுசக்கரத்தேசிகா
என்னையாள்வாய் செய்யாளுமேடுதிகழ்
கையாளுமேவிவளர் திருவணுமலைத்தெய்வமே (5)

திருவேசெழித்தொளிர் திருவணுமலைவளர்
செய்யவள்போற்றுநாதா சீர்மேவுபாற்கடன்
மீதேதுயின்றிடத்தேவரும் மேத்துபாதா
தருவேதழைத்தொளிர் பொன்னகர்மன்னவன்
சசியுடன்வணங்கிநிற்பத் தயவுடன்வரமருள்
சாரங்கபாணியே தமியனுக்கருள்புரிந்து
கருவேறுசென்மங்கள் எந்தனைச்சாராது
காப்பாற்றவேண்டுமையா கண்ணனே கார்மேக
வண்ணனே பார்வதிக்கண்ணனே கஞ்சனொடு
செருவேபுரிந்திடுந் திண்டிறற்செங்கரச்
சேவகனுனதேவே செய்யாளுமேடுதிகழ்
கையாளுமேவிவளர் திருவணுமலைத்தெய்வமே (6)

சந்ததையின்குழுவெனப் பந்துஜனக்கூட்டமும்
தானேநிலைப்பதில்லை தம்பிரானாகிய
நீயேநிலைப்பதிற் சந்தேகவேறுமுண்டோ
முந்தைவினைநீங்கிட மூதறிவுதந்தெனது
முன்வந்துதெரிசனந்தா முகில்போலும்வண்ணனே
முண்டகக்கண்ணனே முகுந்தனேநல்வரந்தா
சொந்தமென்றெண்ணிடும் மைந்தரும்மாதரும்
தொடர்வரோவந்தியத்தில் சொல்லரியநின்கழல்
துதிசெயுமன்பற்கு சுவர்க்கபதநீவுதவுவாய்
செந்தமிழ்வாணரும் தேடித்துதிசெயச்
சேகரத்துடனிருக்குஞ் செய்யாளுமேடுதிகழ்
கையாளுமேவிவளர் திருவணுமலைத்தெய்வமே (7)

மன்னவன்றசரதன் மைந்தனெனவந்துமிசு
வாஞ்சையுறவேவளர்ந்து மடிதனிலிருந்து
விளையாடியவனேதிய வாக்கினைச்சிரசில்வைத்து
இன்னலுறுகானகத்தீரேழுவத்ஸரம் பிளையவனோடிருந்து
யிராவணாதியரொளித்தங்குற்ற ஜனகியை
யேற்றமுடன் மீட்டிவந்தோய்
கன்னனாரவியைத்தம்பியாமற்சுனன் கைக்
கணையினாலழித்தாய் காகுத்தனேநினது
கழல்பணிந்திடும்மெற்கு கருத்துடனுமருளுதூயா
தென்னவன்னாட்டினிற் சிறப்புற்றநகரெனத்
தேவருமேற்றுகின்ற செய்யாளுமேடுதிகழ்
கையாளும்மேவிவளர் திருவணுமலைத்தெய்வமே (8)

மனமுடன்றிரிகரண மாசற்றிலங்கிட மதியுடன்
பூசைசெய்து மன்னியேவென்னாளும்
முன்னியேதுதிசெய்யும் மைந்தனைகைவிடாதே
கனமானகாலனார் வருகின்றவேளையில்
காப்பவர்களாருமுண்டோ கல்லினைப்
பெண்ணுருவாக்குயர்நின்கழல்காப்பதுநிச்சயங்காண்

தனமானவாழ்வினில் சந்தோஷமாகிவுன
தாளிணையை எண்ணிடாதார் சாகின்றநாளினிற்
சண்டனார்தண்டனை தப்பாமலடைவரன்றோ
சினமானகுணமெலாஞ் சேராமலெந்தனற்
சிந்தையுள்வீற்றிருக்குஞ் செய்யாளுமேடுதிகழ்
கையாளுமேவிவளர் திருவண்ணமலைத்தெய்வமே (9)

வேதமுதலிதிகாச புராணமொடுசாத்திர
விபரமெல்லாமறிந்து விற்பனவிலக்கண
விலக்கியங்கற்றோரெளிர் மெய்யானபாவலோர்முன்
ஏதமுறுசிற்றுணர்வெய்துமென் புன்மையை
எண்ணிடாமற்றுணிந்து இத்திருப்பதிகமும்
அந்தாதியுஞ்சொனேன் ஏற்றெனதுகுறைதவிர்ப்பாய்
மாதமும்மாரியுற வாழ்புவிசெழிப்புற மானிடர்
மகிழ்ச்சியாக மனைதோறுமலர்மாதரிருவரும்
மன்னியேவாடாமல் வாழி வாழி
சீதமும்தென்றலுஞ் சேர்ந்திலகு பொழில்களால்
தேவநகர் தம்மையொக்கும் செய்யாளுமேடுதிகழ்
கையாளுமேவிவளர் திருவண்ணமலைத்தெய்வமே. (10)

முற்றிற்று.

## ஸ்ரீவேங்கடேசன் அந்தாதி

---

### காப்பு வெண்பா.

மாதிருவர்மன்னுபுது வாபுரியின் மாட்டமரும்
மாதிருவண்ணாமலையின் மாதவனந்—தாதிசொலப்
போதகமுகந்தனைக்கொள் புங்கவாதந்தருணற்
போதகமுகந்தனையேபோல்.

---

### நாமகள் துதி.

வெண்டாமரைமலரில் மேதினியெலாம்படைக்கு
மெண்டோளயன்றன் எழினாவில்—அண்டிமிக
வாச்சரியமாகவளர் அன்னையே அந்தாதி
பாச்சரியதாகக் கண்பார்.

---

### நூல்.

சீராருஞானியருள்ளம் வைகுந்தம் சிறந்துறைமால்
தாராருந்தண்மலர் கொண்டே தினமுநற்றாள் பணிந்து
பாரானதிற்பலருய்வான் கருணையைப் பாலிக்கநல்
லூரானமேற்றிருவண்ணாமலை வந்துறைந்தனனே (1)

உறைந்தவனேயரியாமவ னெவ்வெவ்வுலகினுளும்
நிறைந்தவனே யெந்தனெஞ்சிலிருந்திடு நின்மலனா
மறந்தவஞ்செய்திடு மன்பர்க்கல்லாமலவனடியை
மறந்தவஞ்செய்திடு வன்பர்க்கருளது வாய்ப்பரிதே (2)

வாய்த்திடுநற்பல னென்றெதிர்பார்த்து வனச்சபரி
வாய்க்கினிதாக வளர்கனிதந்து வணங்கிநிற்பத்
தாய்க்கிணையாகத் தயவுடன் மோட்சத் தலைளித்தாய்
நாய்க்குங்கடையே னெனக்குமருள்புரி நாயகனே (3)

நாயகனேயுனேயன்றித் துணையில்லை நம்புமெற்குத்
தாயகம் நீயெனச்சந்திரகளே துதிதான்செயவே
போயவடன்பதியாகிப் புலமுடன் பொற்பதமும்
நேயவிளமையுந்தந்தவனே திருநின்மலனே (4)

திருவொடு வாழ்ந்திடு தேவேதிகட்டலிற் றென்னமுதே
பருவதமேலிருந் தாளுகைசெய்யும் பரஞ்சுடரே
அருவினை தீர வனுதினமெந்தனகமதனில்
இருவெனவேபணிந்தே னெழில்வேதத் திருப்பவனே (5)

இருப்பவனெவ்விட மென்றுவினவு மிரணியற்குக்
கருப்பையுறுமல் கருணைசெய் கண்ணன் கற்றூணிதன்கண்
ணுருப்படைத்தூடிருப்பானென வவ்விதமூடிருந்தாய்
மருப்பதிணை தனமாமின் பணிவன மாதவனே (6)

மாதவனே திருவண்ணாமலைவளர் மாயவனே
ஆதரம்வேறிலை நின்சுதனுமெனக் கன்புடனே
சாதகமாகிய நல்லருள்கூர்ந்து சகமனிதர்
பாதகமில்லையெனச் சொலவே நின்பதமருளே (7)

அருளேயறிவொடு மெய்ஞ்ஞான மேவுமடியவர்க்குத்
தெருளேநலந்தரு செய்யவணுளுந் திகழ்ந்துறையும்
குருவேயமரர்கள் கூடிப்பணிசெயுங் கொற்றவனே
வருவாய்நினது தெரிசனமேதர வாமனனே (8)

தெரிசனந்தாவெனத் தேடித்துதிசெயுஞ் சிலருக்குப்
பரிப்வமூழ்வினையாவுமொழிக்கு மெய்ப்பண்ணவநிற்
குரியவனுமென நீயறிந்தெற்கா முயர்வரங்கள்
தரவரிதோ வரந்தந்தாளவே னின்னந் தாமதமே (9)

இன்னலொழிந்திட வென்னகத்தென்று மிருந்தருள்வாய்
கன்னலனைய சொற்பொன்னுண் மருவுகருணைவள்ளால்
மின்னலர்மன்னுமிறையை யுதவியமெய்ப்பரனே
பன்னலமார் திருவண்ணாமலைவளர் பார்த்திபனே (10

பார்த்திபனே தினந்தோத்திரஞ்செய்திடு பத்தர்பவந்
தீர்த்தவனேயருள் செய்யுந்தயாபர தேவவெனைக்
காத்தவனே திருதன்னோடுகந்து கபீர்தனக்கு
வார்த்தமுதென்னவு நற்பலனீய்ந்திடும் வாமனனே (11)

வாமனமே யானுனக்கொருபுத்தி வழுத்துகிறேன்
சோமனிரவிசுரருந் துதிக்குந் துளபமலர்த்
தாமமணிபுயன் சக்கரத்தானிரு தாடுதித்தாற்
றீமையுறுதவன் வைகுந்தமேவித் திரிகுவையே (12)

திரியுமனம் புவியாசையிலே திரியாதிருக்க
அரியேயருள்செய்வ னென்றே மறைகணல்லாகமங்கள்
தெரியவுணர்த்துவ தாலவன்றன பதஞ்சிந்தைசெய்தாற்
பரிவுருவாம் பரந்தாமனருளுவன் பாக்கியமே (13)

பாக்கியமோங்குநல் வாழ்வுந்தவமு மிப்பாருலகை
யாக்கியவேதநற் றூதையருளும் மறுமறையின்
வாக்கியமேய் ம்மாதவனின்பதம் வணங்குவர்கள்
நாக்கியல்பாக நவிலும்பலபல ஞானமுமே (14)

ஞானமுடனிதம் நாரணனைத்தொழும் நாவலர்க்கு
மோனமனமுறுமுத்த மிழ்சேருமுதன்மையுறும்
வானமுதுண்பவர் வந்தேபணிய நல்வாழ்வுயரும்
தேனமர்நீயுரை கீதையன்பாளர் செவிக்கமுதே (15)

செவியமுதாகிய செந்தமிழோதித் தினந்தொழுது
குவிமலர்பூக்கொண் டுயர்பூசனைசெய்த கொற்றவற்குப்
பவமறவேயருள்சண்ணு விவ்வேழைசொற்பாப் புனைந்து
யுவர்வரிசூழ்புவி யெங்கணுமோங்கச்செய் யுத்தமனே (16)

உத்தமனுமுனை நித்தம்பணிவ னுறுதியுடன்
சித்தமகிழ்வொடுன் புத்திரனுமெனச் சிந்தைவைத்து
மெத்தவுயர்புக ழுன்பதமேத்தி விளங்குகின்ற
தத்துவஞானத்தை யிங்ஙனந்தரு டாயகனே (17)

தந்தருளின் பந்தனயோகமோங்குந் தவநிலையுஞ்
சுந்தரமான சுடரொளிநீமெய்ச் சுருதியதின்
அந்தமுநீ யவ்வரனயனீ மிக்கடைக்கலநீ
யெந்தையரு டிருவண்ணாமலைக் கண்ணிறையவனே (18)

இறையவனே திருவண்ணாமலைவள ரீசுரனே
நறையணிவாச வனமலர்த்தாரணி நாரணனே
கரையணிகண்டனுக் காதரவா யமர்காரணனே
முறையறியாம லுனைத்துதிசெய்யினு முன்னிற்பையே (19)

முன்னிற்பவமறு முன்னற்பதத்தை முழுமுதலே
பொன்னிற்புகுந்து புரந்தரன்வாழ்வு புகவருள்வள்
சொன்னற்றமிழ்மிகச் செய்குவள்வெண்மலர்த் தோகையவள்
நன்னற்பொழிற்றிரு வண்ணாமலைப்பதி நாயகமே (20)

மலைவளர்நாயகம் மாதிருநாயகம் மாகருய்ய
நிலைவரநாயகம் நெஞ்சினினைந்திடு நேயருக்கு
மலைவறநல்லவர மருணாயகம் வன்பவநோய்
தொலைவுறச்செய்தெனைக் காப்பாயண்ணாமலை சுந்தரனே

சுந்தரனேயரியாசனனே யுன்சுதன் மனதில்
வந்தமர்ந் துந்தனுக்காலயமென்ன வசிப்பதுடன்
அந்தத்திலந்த வைகுந்தத்திலென்னை யணைத்துவைப்பாய்
சந்தத்துடனிதம் போற்றுமென் மீதுன்றயவில்லையே (22)

தயவில்லையாயினும் சாரங்கபாணிநின்றூண் மறவேன்
செயவில்லை நீள்கரத்தேந்தி மகிழ்ந்திடு சீதரனே
நயமில்லையென் றுதியானலு மொப்பிநமன் வருநாட்
பயமில்லையென் றுபகர்ந்தாண் டருள்புரி பண்ணவனே (23)

பண்ணலுனைத்துதி பண்ணுதநாயினன் பத்மமலர்க்
கண்ணவிசயனுக் கண்ணவியாகிய காருண்யனே
மண்ணுளுமன்னர் மறையோர்திகழ் திருவண்ணமலை
நண்ணார்கணுய்ப்பிறப்பாமென்ற வேதத்தைநம்புவனே (24)

நம்பினதொண்டர் நரர்பதியாகுவர் நாகர்பதி
யும்பினராளுவ ரோயாப்பிறவி யுபாதியுறார்
கொம்பினறு மலர்த்தேனூறு கூடிடுங்கோனெறியி
னம்பலேமோதுமண்ணாமலை மேற் சங்கினத்தத்தனே (25)

சங்கந்தனுவரி வாடண்டநேமி தரித்தவனே
அங்கந்தன்மாம னங்கசன்தந்தையென் றண்டியயான்
அங்கந்தனைக் கொண்டினிப்பிறவா மலருள் புரிவாய்
சங்கந்திகடிரு வண்ணாமலைமெய்த் தயாபரனே (26)

பரமேயெனத்துதி பண்ணவிதுரன்றன் பாலடைந்து
வரமேயருளிய மாமலர்க்கண்ண வாதுகொண்ட
உரமேவிராவணனுதியர் வாழ்வுமுயர்புகழுந்
திரமோடளித்தருள் திண்புயமேவியதிவ்வியனே (27)

திவ்வியமேவிய செந்திருமாது தினமிருக்குஞ்
செவ்வியமார் திருவண்ணாமலைவளர் தேசிகனே
கவ்வியமர்கரன் பாலாழிபெற்றுட னன்கடியார்க்
கெவ்விதமுந்தயை செய்தாண்டு கொண்டருளீசுரனே(28)

ஈசுரனே யருளெந்தை குசேலற்கிதமளித்த
பூசுரனேயுனைப்போற்றிப் புகழும் புனிதர்தமை
மாசுரராக்கி மகிழ்ந்திடசெய்குவை வாழ்த்துமெனை
தேசுறுநின்னன்பர் கூட்டத்துள்சேர்த்தருணிச்சயமே(29)

நிச்சயமாயுனை நித்தந்தொழுது நினைத்தவர்கட்
கிச்சகமீதினி லெச்சுகமுங்குறை வில்லையென்று
உச்சிதமாயுலகோதிட நல்வரமுற்றருள்வாய்
செச்சைபுனை திருவண்ணாமலைவளர் சீரவனே (30)

முற்றிற்று

---

## வெளிவருகிறது வெளிவருகிறது

1. மார்கழி மஹோத்ஸவ மஹாத்மியம்

ஸ்ரீ ஆண்டாள்பேரில்

2. சுக்கிரவார ஸ்தோத்திரம்

3. காவடிச்சிந்து

4. தண்டபாணி பதிகம்

முதலிய புஸ்தகங்கள் கூடியசீக்கிரம் வெளிவருகிறது.

---


ஷ புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:-

வெங்கடாஜல ஜெஸ்யர்,

ஒத்தத்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர்.

T. A. S. ராகவா அன்கோ.,

ஸ்டேஷனரி & புஸ்தக வியாபாரம்,

ஸ்ரீவில்லிபுத்தூர்.